செ.வெ.எண்:61 நாள்:25.09.2018

**கரூர் மாவட்டம்**

**முதலமைச்சர் மாநில இளைஞர் விருது 2018-க்கு தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழகஅரசுஆண்டுதோறும் பன்னாட்டு அளவிலும், தேசிய அளவிலும் பதக்கங்கள்பெற்றுசிறந்து விளங்கும் 2 ஆண்கள்மற்றும் 2 பெண்கள்விளையாட்டுவீரர்கள், 2 சிறந்தபயிற்றுநர்கள், 2 சிறந்தஉடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டுவிருது பாராட்டுப்பத்திரம் ஆகியவற்றை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுவிருது பரிசாக தலா ரூ.1.00 இலட்சம் வீதம், ரூ.10000/- மதிப்பிலானதங்கப்பதக்கம் மற்றும் பாராட்டுப்பத்திரம் ஆகியவற்றை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைவழங்கி ஒவ்வொரு நிதியாண்டிலும் (ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய ) வழங்கி வருகிறது. இதுதவிர விளையாட்டுப் போட்டிகளைநடத்தும் ஒரு நடத்துநர்/ ஒரு நிர்வாகி/ ஓர் ஆதரவளிக்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர்/ ஒரு ஆட்டநடுவர் /நடுவர் /நீதிபதிஆகியோர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டுவிருது ஒவ்வொரு நிதியாண்டிலும் (ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய) வழங்கப்படுகிறது. இவர்களுக்கு மேற்கண்ட விருதிற்கு ரூ. 10000/-க்கு மிகாமல் ஒரு தங்கப்பதக்கமும் ,ஒரு பராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு விருது வழங்குவதற்கு முந்தைய இரண்டு வருட செயல்பாடுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். பெண்களுக்கும்/பட்டியல்இனத்தவர்களுக்கும் / பழங்குடியினர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இது குறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில், இத்திட்டத்தின்படி, 2013-14, 2014-15, 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆகிய நிதியாண்டுக்கான (காலம் ஒவ்வொரு வருடமும் 1 ஏப்ரல்முதல் 31 மார்ச் வரை) முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பங்கள், விருது ஆண்டுக்கு முந்தைய மூன்று ஆண்டுகள்தமிழ்நாட்டில் வாழ்ந்து சாதனைகள் படைத்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் பன்னாட்டுஅளவில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களில் பதக்கமும் அதாவது உலகக் கோப்பை, தெற்காசிய விளையாட்டு போட்டிகள் (SAARC) அங்கீகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட விளையாட்டு இணையங்களினால் நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகள்மற்றும் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் தனிநபர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களிலும் மற்றும் குழுப் போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடமும் பெற்றிருத்தல் வேண்டும். ஒரு விருதிற்கு மூன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பங்களைஅதே வருடத்தில்அனுப்பக் கூடாது.

விருதுக்கு விண்ணப்பிக்கும் தலைசிறந்த விளையாட்டுவீரர்கள் தமிழ்நாடு விளையாட்டு கழகம்/மாவட்ட விளையாட்டு அலுவலர்/முதன்மைக்கல்வி அலுவலர்/ முதன்மைஉடற்கல்விஅலுவலர் (ஆடவர்/மகளிர்) மூலமாகவும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் ஒரு நடத்துநர்/ஒரு நிர்வாகி/ ஓர் ஆதரவளிக்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர்/ ஓர் ஆட்டநடுவர்/ நடுவர்/ நீதிபதி ஆகியோர்கள் உரிய வழிமுறையாகவும், விண்ணப்பங்கள் உறுப்பினர் செயலர் அவர்களுக்கு வந்துசேரும்படி அனுப்பவேண்டும்.

விளையாட்டில் சிறந்து விளங்கும் விளையாட்டுவீரர்/ வீராங்கனைகளுக்கு மற்றும் விளையாட்டுப் போட்டிகளைநடத்தும் ஓர் நடத்துநர்/ ஒரு நிர்வாகி/ ஓர் ஆதரவளிக்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர் /ஒரு ஆட்டநடுவர்/ நடுவர்/ நீதிபதி ஆகியோர்களுக்கான முதலமைச்சர் மாநில விளையாட்டுவிருதுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விரிவான விதிமுறைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.(www.sdat.tn.gov.com)

விண்ணப்பங்கள்அடங்கிய உறைமேல் முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பம் என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 116 - ஏ.ஈ.வெ.ரா.சாலை நேரு பூங்கா சென்னை- 84 என்ற முகவரிக்கு 10.10.2018 ஆம் தேதி சென்றடையுமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்**